06.08.2025 IA.8/2023 in OS.No. 88/2019

சாட்சி : PW 1 பாபு

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனக்கு பூர்வீகம் ஊர் எது என்றால் நான் பிறந்த ஊர் பொள்ளாச்சி, பூர்வீகம் அறந்தாங்கி. நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.பி.ஏ படித்துள்ளேன், தமிழ்நாடு டாஸ்மார்க் கடையில் சூப்பர்வைசராக வேலை பார்த்துவருகிறேன். இறந்து போன வாதி நாராயணன் எந்த ஊர் என்றால் காரைக்குடியில் குடியிருந்தார், அவரது பூர்வீகம் கல்லல் ஆகும். நாராயணன் என்ன படிப்பு படித்துள்ளார் என்றால் பி.யு.சி படித்துள்ளார். அவர் எதாவது வேலை செய்தாரா என்றால் சிவகங்கை அரசு மன்னர் கல்லூரியில் பணிபுரிந்து வந்தார். இறந்து போன வாதி என்னுடன் எத்தனை வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தார் என்றால் 2003 லிருந்து இறந்துபோன வாதியை எனக்குத் தெரியும். எவ்வளவு காலம் என் பாதுகாப்பில் இறந்துபோன வாதி இருந்தார் என்றால் 2003 லிருந்தே என்னுடன் பழகி வந்தார்.

2. நான் பொள்ளாச்சியில் என் பாதுகாப்பில் எத்தனை காலம் வைத்திருந்தேன் என்றால் 2022 லிருந்து சுமார் 1 வருடம் என் பாதுகாப்பில் வைத்திருந்தேன். அதற்கு முன்பு அவர் காரைக்குடியில் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். இறந்துபோன வாதியின் மனைவி எங்கு வசித்து வந்தார் என்றால் காரைக்குடியில் தான் வசித்து வந்தார். வாதியின் மனைவி இறக்கும் முன்பு இறந்துபோன வாதியும், அவரது மனைவியும் எத்தனை வருடம் காரைக்குடியில் ஒன்றாக வசித்து வந்தார்கள் என்றால் சுமார் 13 வருடம் இருக்கும். கல்லலில் எனக்கு உறவினர்கள் யாரும் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள்.

3. வாதியின் மனைவிக்கு என்ன வியாதி வந்தது மற்றும் அவர் எப்போது இறந்தார் என்றால் 2013 ம் வருடத்தில் இறந்தார், அவருக்கு சிறுநீர் கோளாறு இருந்தது. வாதியின் மனைவி யாரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும், என்ன சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும் எனக்குத் தெரியுமா என்றால் சிவகங்கை அரசு

மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்பது எனக்குத் தெரியும். வாதி இறப்பதற்கு முன்பு என்னுடன் இரண்டு மூன்று மாதங்கள் என்னுடன் இருந்த காலத்தில் எதற்காக சிகிச்சை மேற்கொண்டார் என்றால் அவருக்கு தொண்டையில் புண் இருந்ததால் காரைக்குடியில் சிகிச்சை மேற்கொண்டார். ஏதேனும் ஆதாரம் வைத்துள்ளேனா என்றால் அதற்குரிய சி.டி வைத்துள்ளேன்.

4. வாதி பொள்ளாச்சியில் இறந்ததை யார் உறுதி செய்தார்கள் என்றால் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் பணிபுரியும் திரு.பிரவின் என்ற மருத்துவர் உறுதி செய்தார். மருத்துவர் கொடுத்த சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி இறந்தவுடன் யார் யாருக்கு தகவல் கொடுத்தேன் என்றால் இறந்து போன வாதிக்கு வேறு யாரும் இல்லை என்பதால் நான் யாருக்கும் தகவல் கொடுக்கவில்லை. வாதி போட்டுள்ள தாவா வழக்கு தொடர்பாக முழு விபரமும் எனக்குத் தெரியும் என்றால் ஓரளவிற்கு தெரியும். வாதி தாவாச் சொத்தை யாரிடம் அடமானம் வைத்தார் என்றால் காசி விஸ்வநாதனிடம் அடமானம் வைத்தார். வாதி வைத்தாரா அல்லது அவரது தகப்பனார் வைத்தாரா என்றால அவரது தகப்பனார் வைத்தார்.

5. அந்த அடமானம் பொறுத்து எவ்வளவு தொகை, வட்டி எவ்வளவு என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் அந்த விபரம் எனக்குத் தெரியாது. அடமானத்தை திருப்பிய விபரமாவது எனக்குத் தெரியுமா என்றால் அடமானம் இன்னும் திருப்படவில்லை. இறந்துபோன வாதியோ, அவரது தகப்பனாரோ காசி விஸ்வநாதனிடம் வாங்கிய கடனை திரும்ப கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த அசல் மற்றும் வட்டியையாவது நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார்களா என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் கல்லலில் உள்ளது. அதற்கு சார்பதிவாளர் அலுவலகம் எங்கு உள்ளது என்றால் அதுபற்றி இனிமேல் தான் தெரிந்துகொள்ளவேண்டும்.

6. வாதி நாராயணன் எனக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் உயில் எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டது என்றால் தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டது. அந்த உயில் பதியும் போது நானும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன் என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்திற்கு

போகும் போது என்னென்ன ஆவணங்களை எடுத்துச் சென்றோம் என்றால் அதை அவர்தான் கொண்டுவந்தார் அதனால் எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்து சம்மந்தமாக வேறு எந்த விபரமும் எனக்குத் தெரியாது என்றால் காசி விஸ்வநாதனிடம் அடமானம் வைத்த விபரம் மட்டும் எனக்குத் தெரியும். உயில் ஏற்பாடு செய்த காலத்திலிருந்து அவர் இறக்கும் வரை என்வசம் தான் இருந்தது என்றால் இல்லை, அவர் பொள்ளாச்சி வரும்போது என்னிடம் கொடுத்தார்.

7. வாதி ஏற்பாடு செய்த உயிலில் தனக்கு வாரிசுகளே கிடையாது என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாகவும், மற்ற வழக்கு சம்மந்தமாகவும் உயர் நீதிமன்றத்திற்கு சென்ற மனுவிலும் என்னைத் தரப்பினராக சேர்க்ககோரி நான் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துகளையும் சேர்த்து, மேற்படி எனக்கு நண்பரும் பாதுகாவலரும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் வாங்கியுள்ள மா.சா.ஆ.4 வாரிசு சான்றிதழில் என்னை சகோதரர் என்று குறிப்பிட்டுதான் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வாரிசு சான்றிதழ் வாங்கியதற்கு என்னென்ன விபரங்களை நான் தாக்கல் செய்தேன் என்றால் வாதியின் இறப்புச் சான்றிதழ், வாதி மனைவியின் இறப்புச் சான்றிதழ், என் ஆதார் அடையாள அட்டையின் நகல் மற்றும் உயில் நகல் கொடுத்தேன்.

8. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்து எனக்கு வாரிசு சான்றிதழ் வழங்கினார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மா.சா.ஆ.4 ஆவணம் போலியானது என்றும், வழக்கிற்காக நான் தாக்கல் செய்து உற்பத்தி செய்த ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. பொள்ளாச்சி வட்டாட்சியர் அவர்களை வரவழைத்தால் அந்த ஆவணத்தின் உண்மை தன்மை தெரிந்துவிடும் என்றால் சரிதான். வாதியின் மனைவியின் இறப்புச் சான்றிதழும் போலியானது என்றும், வழக்கிற்காக உற்பத்தி செய்தது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கும் வாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும்போது உயிலை ஏற்பாடு செய்தவற்கு நானோ, வாதியோ நீதிமன்றத்தில் முன் அனுமதி பெற்றோமா என்றால் இல்லை.

9. வழக்குச் சொத்திற்கும் வாதிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்பதால், என் பெயரில் உயில் ஏற்பாடு செய்து கொடுக்க எந்த அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளின் சொத்தினை அபகரிக்கவேண்டி ஆவணம் தயார் செய்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு வேறு வாரிசுகள் யாரும் இல்லாத நிலையில் நான் சகோதரர் என குறிப்பிட்ட இந்த ஆவணத்தை போலியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 முதல் 10 வரையிலான ஆவணங்கள் மோசடி ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.2 ன் அடிப்படையில் என்னை தரப்பினராக சேர்க்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் உண்மை தன்மை இல்லை என்றும், அதனால் மனுவானது தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல.

10. வாதி உயிலில் பாதுகாவலர் மற்றும் நண்பர் என சொல்வது பொய்யா அல்லது நான் அவரது சகோதரர் என ஆவணம் பெற்றுள்ளது பொய்யா என்றால் நண்பர் என்பதுதான் உண்மை. ம.சா.ஆ.5, 6 ஆவணங்கடளை சாட்சிய சட்டத்தின்படி முறையாக நான் நிரூபிக்க தவறிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை இந்த வழக்கில் உத்தேச தரப்பினராக சேர்க்க எவ்வித முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன வாதிக்கு நான் சகோதரரே இல்லை என்றும், நான் தாக்கல் செய்த மனுவானது உரிய காலத்தில் உரிய முறையில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தற்போது உள்ள காலத்தில் அனைத்துச் சான்றிதழும் கணிணிமயமாகிவிட்டது என்றும், நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.4 ஆவணமான கணிணிமயம் இல்லை என்று சொன்னால் இரண்டாம் நிலை வாரிசுதாரருக்கு கணிணிமயம் சான்றிதழ் இல்லை.

11. நான் வாதிக்கு இரண்டாம் நிலை வாரிசு என்பததை எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்று சொன்னால் என் மனைவியும், வாதியின் மனைவியும் உறவு முறை, அதன் அடிப்படையில் இரண்டாம் நிலை வாரிசு என கூறுகிறேன். என் மனைவியும், வாதியின் மனைவியும் உறவினர்கள் என்பதை நான் தெரிவித்துள்ளேனா என்றால் கடிதம் மூலம் தெரிவித்துள்ளேன். அந்த கடிதத்தின் நகல் தற்போது என் வசம் உள்ளதா என்றால் பார்த்துதான் சொல்லவேண்டும். அது குறித்து பொள்ளச்சி தாசில்தார் அலுவலகத்தில்

கேட்டால் தெரியவரும் என்றால் சரிதான். நான் இறந்துபோன வாதிக்கு எவ்வகையிலும் உறவினர் இல்லை என்றும், நான் அவரது வாரிசு என பொய்யாக காண்பித்து தற்போது இந்த வழக்கினை நடத்தி பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நான் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(6 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.